# 5 பல்வகை கற்பனைக் கதைகள் எழுதுதல்

**இலக்கு**

மாணவர்களின் ஆக்கத்திறனைக் கூடுதலாக்கவும் விளையாட்டாகவும் எளிதான முறையிலும் தங்கள் முதல் மொழியில் எழுதும் மற்றும் கதை சொல்லும் மகிழ்வினை ஊக்குவிப்பதற்கு எழுத்துருக்களை ஒப்பிடவும் மதிப்பிடவும் எளிமையான வழிகளை உருவாக்குதல்.

## 1. பங்காளிக் கதைகள்

2 - 6 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

மேற்கோள் காட்டப்பட்டது:
பூசெல் மற்றும் இஸ்லெர்
2006, ப. 146

அ) மாணவர்கள் இருவராக இணைந்து செயற்படுவர் (அவர்கள் வேறுபட்ட வயதுக் குழுக்களாகவும் அமையலாம்). மாணவன்/மாணவி – 1 ஒரு கதையின் தொடக்கம் பற்றி எண்ணுகிறான்/எண்ணுகிறாள் (ஒரு வாக்கியம்) அவ் வாக்கியத்தினைப் பங்காளிக்கு (மாணவன்/மாணவி – 2) எழுதுதற்குச் சொல்கிறான/சொல்கிறாள்.

ஆ) மாணவன்/மாணவி 2 வாக்கியத்தை எழுதிக்கொண்டு கதை எப்படித் தொடரும் என்பதைக் கற்பனை பண்ணுகிறான/பண்ணுகிறாள், பின்னர் தன்னுடைய பங்காளிக்கு (மாணவன்/மாணவி 1) அடுத்த வாக்கியத்தினை எழுதுதற்குச் சொல்கிறான்/சொல்கிறாள்.

இ) முடிவில், வெவ்வேறு இணையர்களும் மற்றக் குழுக்களுக்கு தங்கள் கதைகளை படித்துக்காட்டுவர். வேறுபாடு (ஒத்த திறன்களையுடைய மாணவர்கள் இணையராகலாம்): இச்செயற்பாடு அமைதியாக நடத்தப்படும். மாணவன்/மாணவி 1 ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களை எழுத (கதையின் தொடக்கம்) மாணவன்/மாணவி 2 ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுடன் தொடர்வான்/தொடர்வாள், போன்றன.

---

## 2. ஒரு தலைப்பு பல எழுத்துருக்கள்

3 - 6 ஆந் தரம் | 30 - 40 மணித்துளிகள்

அ) கற்பனையைத் தூண்டுதற்காக கவர்ச்சியான ஒரு தலைப்பை ஆசிரியர் வகுப்புக்குக் கொடுக்கிறார். எடுத்துக்காட்டுகள்:
"நான் வித்தை செய்பவனானால்"/"நான் அரசனானால்/அரசியானால் (அல்லது ஜனாதிபதி/முதல் மந்திரி)"/"என் குடும்பத்தினரின் சொந்த நாட்டுக்கு வாழ்த்துகள்".

ஆ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் தலைப்புகளுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஓர் எழுத்துரு எழுதுவர் அல்லது எழுத்துருவையும் அது பற்றிய விளக்கங்கள் உடனான ஒரு A3 சுவரொட்டியை உருவாக்குவர்.

இ) குழுக்களாக அல்லது முழு வகுப்புமாக எழுத்துருக்களைக் காட்சிப்படுத்தல், முன்னிலைப்படுத்தல், கருத்தாடல்.

---

## 3.விறுவிறுப்பான நூலை கூட்டாக எழுதுதல்

4 - 9 ஆந் தரம் | 60 - 120 மணித்துளிகள்

கருவிகள்:
கோவை

அ) மாணவர்களுக்கான ஒப்படை: (குழுக்களாக அல்லது வகுப்புத் திட்டமாக) கூட்டாக, நீங்கள் பிறந்த நாட்டில், அல்லது தற்போது வாழுமிடத்தில், அல்லது வையகத்தில் எங்காவது அல்லது வானவெளியில் – உண்மையில் நீர் விரும்பும் எவ்விடத்திருந்தும்! பல்வகை வீரச்செயல்களைச் செய்த இரண்டு கதைமாந்தர்கள் பற்றி கூட்டாக எண்ணி கற்பனை பண்ணுக. கதைமாந்தர் பெயர்களை (ஏற்கத்தக்கதாக, ஒரு சிறுவனும் சிறுமியும்), அவர்களுடைய வயது என்ன, அவர்களின் சில சிறப்பான திறன்களை அல்லது வல்லமைகளை (எ.கா. வித்தை செய்தல், ஒளி வேகத்தில் வெளி மற்றும் காலம் ஊடாக பயணிக்கக்கூடிய வல்லமை...) உறுதிசெய்க. கூட்டாக ஒவ்வொரு கதைமாந்தருக்கும் தன்விவரம் ஒன்றை ஆக்கிக்கொள்ளவும் (பெயர், வயது, பொழுதுபோக்குகள், சிறப்பு வலிமைகள் முதலியன), அது உங்கள் வீரச்செயல் நூலின் தொடக்கத்தில் சிறப்பிடம் பெறும்.

ஆ) இன்றியமையாக் கதைமாந்தர் பட்டறிந்த ஒன்று அல்லது பல வீரச்செயல்களை ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் எழுதி விவரிப்பர்.

இ) ஒவ்வொருவராக உங்கள் வீரச்செயல் கதைகளைப் படித்து பின்னர் ஒன்றாக அவற்றைத் திரட்டிக் கட்டுக.

ஈ) மாணவர்கள் தொடர்ந்து வீரச்செயல் கதைகளை எழுதித் தொகுப்பர். கால ஓட்டத்தில் வகுப்பு தங்களுக்கான ஒரு வீரச்செயல் நூலை உண்டாக்கிவிடுவர்.